வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் செங்கேணி பழனி

தேதி 13.07.2026 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

நாட்டின் இளையோர் சக்தியின் திறனும், அர்ப்பணிப்பும், ஒலிம்பியாட் வெற்றியில் வெளிப்பட்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடைபெற்ற மரம் நடும் இயக்கத்தை, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று தொடக்கி வைத்தார்.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தலைமையிலான குழு, இன்று முதல், வரும் 17ஆம் தேதி வரை, ஸ்பெயின், பெல்ஜியம், மற்றும், ஃபின்லாந்து ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்கிறது.

பல்வேறு கல்விப் பாடப் பிரிவுகளில், மாணவர் சேர்க்கை, விதிமுறைகள் அடிப்படையில் வெளிப்படைத் தன்மையுடன் நடைபெறுவதாக, ஜிப்மர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

-----------------------------

*பிரதமர் (7)*

நாட்டின் இளையோர் சக்தியின் திறனும், அறிவியல் மற்றும் ஆராய்ச்சியில் அவர்களது ஆர்வமும், அர்ப்பணிப்பும், ஒலிம்பியாட் வெற்றியில் வெளிப்பட்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி

கூறியுள்ளார். கொலம்பியாவில் நடைபெற்ற, 56ஆவது சர்வதேச இயற்பியல் ஒலிம்பியாட் போட்டிகளில், 5 இந்திய மாணாக்கர் தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளதற்கு, பிரதமர் தமது சமூக சமூக ஊடகப் பதிவில் பாராட்டு தெரிவித்துள்ளார்.

------------------------------

*பாரத் டெக்ஸ்* (16)

இந்தியாவின் மிகப் பெரிய, உலகளாவிய ஜவுளி துறையின் பாரத் டெக்ஸ்-2026 கண்காட்சி, நாளை தொடங்குகிறது. புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறும் இந்த 4 நாள் கண்காட்சியில், ஜவுளி, நாகரீகம், நிலைத் தன்மை, தொழில்நுட்பம், புத்தாக்கம், மற்றும், சர்வதேச வர்த்தகம் ஆகிய துறைகளில், இந்தியாவின் வளர்ந்து வரும் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தும் விதமாக அமையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்நிகழ்ச்சியில், உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், முதலீட்டாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், சர்வதேச பிரதிநிதிகள், மற்றும், கைவினைஞர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்க உள்ளனர். தொடர்ந்து, புதுடெல்லியில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய பாரத் டெக்ஸ் வர்த்தக கூட்டமைப்பின் தலைவர் திரு. நரேன் கோயங்கா, இக்கண்காட்சியில், அமெரிக்கா, ஜப்பான், போர்ச்சுக்கல், ஸ்பெயின், நியூசிலாந்து, தென்கொரியா, தென்னாப்பிரிக்கா, மற்றும், நேபாளம் உள்ளிட்ட 14 நாடுகளைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள், 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜவுளிப் பொருட்களை காட்சிப்படுத்த உள்ளதாக தெரிவித்தார்.

------------------------------

*ஓம் பிர்லா* (12)

நியூசிலாந்தின் கிராமப்புற சமூகங்கள் துறை அமைச்சர் திரு. மார்க் மார்க் பேட்டர்சன் தலைமையிலான தூதுக் குழுவினர் இன்று புதுடெல்லியில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில்,மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லாவை சந்தித்தனர். நாடாளுமன்ற பரிமாற்றங்களை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும், இந்தியாவுக்கும்,

நியூசிலாந்துக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை மேலும் ஆழப்படுத்துவதன் அவசியத்தையும், இந்த சந்திப்பு உறுதிப்படுத்தி உள்ளது என்று, திரு. ஓம் பிர்லா, தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்ற வளாகத்திற்கு வருகை புரிந்த அவர்களுக்கு, இந்தியாவின் துடிப்பான, நாடாளுமன்ற ஜனநாயக மரபுகள், மற்றும், கட்டிடக் கலை ஆகியவை அறிமுகப்படுத்தப் பட்டதாக பட்டதாக திரு. பிர்லா கூறினார்.

------------------------------

மரம் நடும் இயக்கம் 1 (3)

தாயின் பெயரில் ஒரு மரம் என்ற கருப்பொருள் அடிப்படையில் இன்று நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டன. இது குறித்த கூடுதல் தகவல்கள்.....

(வாய்ஸ்)

மரம் நடும் இயக்கம் 2 (17)

(வாய்ஸ்)

சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் நீர் சேமிப்பை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றும் நோக்கத்தில், குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடைபெற்ற மரம் நடும் இயக்கத்தை, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று தொடக்கி வைத்தார். அவரது மக்களவை தொகுதி முழுவதும் 1.25 கோடிக்கும் அதிகமான மரக்கன்றுகள் நடப்பட்டன. நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், 2029ஆம் ஆண்டிற்குள், அத்தொகுதியின் பசுமைப் பரப்பை 20 சதவிகிதமாக உயர்த்துவதற்கான செயல் திட்டம் குறித்து எடுத்துரைத்தார்.

புதுடெல்லியில் நடைபெற்ற மரம் நடும் நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌகான், உரையாற்றுகையில், சுற்று சூழலை பாதுகாப்பதற்கும், நிலையான எதிர்காலத்தை உறுதி செய்வதற்கும் மரம் நடுவது மிகவும் அவசியம் என்று வலியுறுத்தினார்.

உத்தரபிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத், கோரக்பூரில் உள்ள விரைவு சாலை அருகே, புனிதமான திரிவேணி எனும் வேம்பு, ஆலம், மற்றும் அரச மரக்கன்றுகளை நட்டு, மாநிலம் தழுவிய விருட்சரோபன் மகா யாக இயக்கத்தை தொடக்கி வைத்தார். இன்று 35 கோடியே 27 லட்சத்திற்கும் அதிகமாக மரக்கன்றுகளை லிங்க்

*மரம் நடும் இயக்கம் 3 (5)*

விரைவு சாலையில் நட்டு  வரலாறு படைத்த மாநில மக்களுக்கு முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

உத்தரபிரேதேச ஆளுநர் ஆனந்தி பென் பட்டேல், ஜன் பவன் வளாகத்தில் சந்தன மரக்கன்று ஒன்றை நட்டு வைத்தார். இந்நிகழ்ச்சியில் அதிகாரிகள், ஊழியர்கள், மற்றும், பொது மக்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

-----------------------------

*மன் கீ பாத் (7)*

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 136 ஆவது மன்-கீ-பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி வரும் 26-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டிய கருத்துக்களை பொதுமக்கள், நமோ செயலி, mygov இணையதளம் மற்றும் 1800 11 7800 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாக  வரும் 24ஆம் தேதி வரை தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-----------------------------

*சிபி ஜார்ஜ் (10)*

வெளியுறவு அமைச்சத்தின் செயலாளர் திரு. சிபி ஜார்ஜ் இன்று, டெல்லியில் போலாந்து வெளியுறவு அமைச்சகத்தின், இணைச் செயலாளர் மற்றும், பொருளாதார மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் இணைச் செயலாளர் ஆகியோரை சந்தித்தார். இந்த

சந்திப்பின் போது, இந்தியா-போலாந்து கூட்டாண்மையின் ஆழமான உறவுகள் குறித்து அவர்கள் கலந்துரையாடினர். தொடர்ந்து அரசியல் அரசியல் ஈடுபாடுகள், வர்த்தகம் மற்றும் முதலீடு, தொழில்நுட்பம், பாதுகாப்பு, கலாச்சாரம், பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் குறித்த ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான தங்களின் உறுதிப்பாட்டை, இரு நாடுகளும் வலியுறுத்தின.

-----------------------------

*பியூஷ் கோயல் 1 (4)*

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தலைமையிலான உயர்மட்ட இந்திய வர்த்தகக் குழு, இன்று முதல், வரும் 17ஆம் தேதி வரை, ஸ்பெயின், பெல்ஜியம், மற்றும், பின்லாந்து ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்கிறது. இதுகுறித்த கூடுதல் தகவல்கள்......

(வாய்ஸ்)

*பியூஷ் கோயல் 2 (18)*

(வாய்ஸ்)

வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், புத்தாக்கம், மற்றும், நிலைத் நிலைத் தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்தி, ஐரோப்பா உடனான இந்தியாவின் பொருளாதார கூட்டாண்மைகளை வலுப்படுத்தவதே இப்பயணத்தின் நோக்கமாகும். இதன் முதல்கட்டமாக, திரு. பியூஷ் கோயல் இன்று ஸ்பெயின் நாட்டிற்கு செல்கிறார். அங்கு அவர், ஸ்பெயின் வர்த்தக சபை, ஸ்பானிய வணிக அமைப்புகளின் கூட்டமைப்பு, மற்றும், ஸ்பெயின் வர்த்தகம், மற்றும், முதலீடு ஆகிவற்றுடன் இணைந்து நடத்தும் ஒரு வணிக வட்டமேசை மாநாட்டில் மாநாட்டில் பங்கேற்க உள்ளார். இம்மாநாட்டில், வாகனத் துறை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், ரயில்வே, செயற்கை நுண்ணறிவு, செமி கண்டக்டர்கள், உணவுப் பதப்படுத்துதல், மற்றும், சுற்றுலாத் துறை உள்ளிட்ட துறைகள் குறித்து, ஸ்பானிய தொழில் துறை தலைவர்களுடன்

தலைவர்களுடன் அவர் ஆலோசனை நடத்த உள்ளார். தொடர்ந்து, வரும் வரும் 14, 15ஆம் தேதிகளில், பெல்ஜியத்திற்கு பயணம் மேற்கொள்ளும் அவர், தேல்ஸ் குழுமம், மற்றும், சிலாக்ஸ் குழுமத்தின் தலைவர்களை சந்தித்து உரையாட உள்ளார். இந்திய-ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக வட்டமேசை மாநாடு மற்றும் தொழில்நுட்ப மன்றத்தின் அமர்விலும் அவர் அவர் பங்கேற்கிறார். இப்பயணத்தின் இறுதிகட்டமாக வரும் 16-17ஆம் தேதிகளில், திரு. பியூஷ் கோயல் பின்லாந்திற்கு செல்கிறார். அங்கு

*பியூஷ் கோயல்* 3 (4)

நடைபெற உள்ள வர்த்தக வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் அவர், தொலை தொடர்பு, உற்பத்தி, ஆற்றல், போக்குவரத்து மற்றும் புத்தாக்கம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை ஆராய்வதற்காக, அந்நாட்டின் முன்னணி நிறுவனங்களையும் பார்வையிடுகிறார்.

------------------------------

*பஞ்சாயத்து ராஜ்* (14)

நீர் மேலாண்மையில், நாட்டை தன்னிறைவு அடைய செய்வதற்கு கூட்டு நடவடிக்கை அவசியம் என்று, பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் அமைச்சகத்தின் செயலாளர் திரு. விவேக் பரத்வாஜ் வலியுறுத்தியுள்ளார். வலியுறுத்தியுள்ளார். புதுடெல்லியில் இன்று கிராம பஞ்சாயத்துகளால் பஞ்சாயத்துகளால் நடத்தப்படும் நீர் வரவு-செலவு திட்டம், மற்றும், நீர் நீர் பாதுகாப்பு திட்டமிடல் குறித்த தேசிய அளவிலான பயிற்றுனர்களுக்கான பயிற்சித் திட்டத்தின் தொடக்க விழாவில் உரையாற்றிய அவர், ஒரு பொதுவான இலக்கை நோக்கி அனைவரும் ஒன்றிணைந்து செயல்படும் போது, அர்த்தமுள்ள மாற்றத்தை அடைய முடியும் என்று, தெரிவித்தார். இந்த முன்னெடுப்பை ஒரு குறிப்பிடத்தக்க குறிப்பிடத்தக்க நடவடிக்கை என்று கூறிய அவர், அமைச்சகம் சுமார் ஒன்றரை ஆண்டுகளாக இதற்காக உழைத்து வருவதாகவும், பங்கேற்பாளர்கள் இந்த பயிற்சித் திட்டத்தில் தீவிரமாக பங்கேற்று, தாங்கள் பெற்ற அறிவை, அவர்களது பகுதிகளில், நீர் தொடர்பான

முன்னெடுப்புகளை மேற்கொள்வதன் மூலம் பயன்படுத்த வேண்டும் வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

-----------------------------

வியட்நாம் (13)

வியட்நாமின் ஃபூ குவோக் தீவு அருகே, நேற்று நடந்த படகு விபத்தில் உயிரிழந்த 15 இந்திய சுற்றுலாப் பயணிகளின் உடல்கள், இன்று ஹோ சி மின் நகருக்கு கொண்டு வரப்பட்டன. ஹோ சி மின் நகரில், தேவையான நடைமுறைகள் முடிந்தவுடன், உடல்கள் விரைவாக இந்தியாவிற்கு கொண்டு வரப்படும் என்று, வியட்நாமில் உள்ள இந்திய தூதரகம், தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளது. மேலும் வியட்நாம் அதிகாரிகளுடன் துணை தூதரகம், ஒருங்கிணைந்து செயல்படுவதாகவும், உடல்களை விரைந்து இந்தியாவிற்கு கொண்டு வருவதற்கான அனைத்து உதவிகளையும் செய்வதாக, உறுதி அளித்துள்ளதாகவும், அந்த பதிவில் குறிப்பிடப் பட்டுள்ளது. முன்னதாக படகு விபத்தில் உயிர் பிழைத்த 15 பேர், மருத்துவ சிகிச்சை பெற்ற பின்னர், இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று, தூதரகம் இன்று காலை தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

-----------------------------

ஜிப்மர் 1 (17)

பல்வேறு கல்விப் பாடப் பிரிவுகளில், அதிகாரப்பூர்வ நடைமுறைக்கு புறம்பாக சேர்க்கை பெற்றுத் தருவதாக கூறப்படும் தகவல்கள் மற்றும் புகார்கள் குறித்து, புதுச்சேரி ஜிப்மர் நிர்வாகம் தெளிவுப்படுத்தி உள்ளது. நிறுவனத்தின் அனைத்து கல்வி பாடப்பிரிவுகளக்குமான மாணவர் சேர்க்கை, முற்றிலும் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில், முழுமையான வெளிப்படைத் தன்மையுடனும், தகுதி அடிப்படையிலும் மட்டுமே நடைபெறுகிறது என்றும், ஜிப்மர் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இளநிலை, இளநிலை, முதுநிலை, மற்றும், சூப்பர் ஸ்பெஷாலிட்டி படிப்புகளுக்கான

படிப்புகளுக்கான சேர்க்கைகள், மத்திய அளவிலான நுழைவுத் தேர்வுகள், தேர்வுகள், கலந்தாய்வு, மற்றும், இடஒதுக்கீட்டு நடைமுறைகள் மூலம், மூலம், NEET, INI-CET, INI-SS, போன்ற தேசிய அதிகார அமைப்புகளால் மட்டுமே மேற்கொள்ளப் படுகின்றன. மேலும், ஜிப்மரில் ஜிப்மரில் பணியாற்றும் எந்த ஊழியர் ஆனாலும், முகவர், இடைத்தரகர், அல்லது, ஜிப்மர் ஊழியர்களின் உறவினர்கள் ஆனாலும், நிர்ணயிக்கப்பட்ட சேர்க்கை நடைமுறைக்கு வெளியே, எந்தவொரு பாடத்திற்கும் மாணவர் சேர்க்கையை ஏற்பாடு செய்யவோ, செல்வாக்கு செல்வாக்கு செலுத்தவோ எந்த அதிகாரமும் இல்லை என்பதை ஜிப்மர் வலியுறுத்துவதாக ஜிப்மர் நிர்வாகம் கூறியுள்ளது.

ஜிப்மர் 2 (4)

எனவே, பொது மக்கள், மாணவர்கள், பெற்றோர்கள், மற்றும், ஜிப்மரில் சேர விரும்பும் விண்ணப்பதாரர்கள், இத்தகைய தவறான தகவல்களை நம்பவோ, அதன் அடிப்படையில் செயல்படவோ கூடாது என்று அறிவுத்துப்படுவதாக ஜிப்மரின் மக்கள் தொடர்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

-----------------------------

விளையாட்டு (10)

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான, முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி, பர்மிங்ஹம்மில் நாளை நடைபெறுகிறது. 3 போட்டிகள் கொண்ட இத்தொடரில், 2ஆவது போட்டி, வரும் வியாழக் கிழமை கார்டிஃபிலும், 3ஆவது இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி, வரும் 19ஆம் தேதி, லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற உள்ளன.

ஃபிஃபா உலக கோப்பை கால்பந்துப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள், நாளை மறுநாள் தொடங்குகின்றன. முதல் அரையிறுதியில், அரையிறுதியில், பிரான்ஸ், ஸ்பெயினை எதிர்கொள்கிறது. வரும் வியாழக் கிழமை நடைபெறும் 2ஆவது அரையிறுதியில், இங்கிலாந்து,

அர்ஜென்டினாவுடன் மோதுகிறது. இறுதிப் போட்டி வரும் 20ஆம் தேதி தேதி நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

---

*வானிலை (6)*

வளிமண்டல அடுக்குகளில் மேற்கு திசைக் காற்று நிலவுவதால், இன்று முதல், 3 நாட்களுக்கு, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஒருசில இடங்களில், மழைக்கு வாய்ப்புள்ளதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனிடையே, தமிழகம், புதுச்சேரி பகுதிகளில், ஆங்காங்கே அதிகபட்ச வெப்பநிலை, 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

------------------------------

*இஸ்ரோ (9)*

இஸ்ரோ என்னும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், ககன்யான் குழு கல அமைப்புகளின் 3 முக்கிய சோதனைகளை இன்று நடத்தியுள்ளது. முதல் சோதனையாக, கடலில் விழுந்த பிறகு, குழு கலம் மீண்டும் நிமிர்ந்த நிலைக்கு திரும்புவதை உறுதி செய்யும் அமைப்பு சரிபார்க்கப்பட்டது. 2ஆவதாக, விண்வெளி வீரர்கள் தங்கியிருக்கும் குழுவின் இடங்களையும், மின்சாரம் மற்றும் உந்து விசையை வழங்கும் சேவை தொகுதியையும் வெவ்வேறாக பிரிக்கும் சோதனை நடத்தப்பட்டது. 3 ஆவதாக, உச்சிக் கவசம் கழன்று விழும்பொழுது, குழு தொகுதியின் கட்டமைப்பு உறுதி செய்யும் சோதனை நடத்தப்பட்டது.

------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

நாட்டின் இளையோர் சக்தியின் திறனும், அர்ப்பணிப்பும், ஒலிம்பியாட் வெற்றியில் வெளிப்பட்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடைபெற்ற மரம் நடும் இயக்கத்தை, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று தொடக்கி வைத்தார்.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தலைமையிலான குழு, இன்று முதல், வரும் 17ஆம் தேதி வரை, ஸ்பெயின், பெல்ஜியம், மற்றும், ஃபின்லாந்து ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்கிறது.

பல்வேறு கல்விப் பாடப் பிரிவுகளில், மாணவர் சேர்க்கை, விதிமுறைகள் அடிப்படையில் வெளிப்படைத் தன்மையுடன் நடைபெறுவதாக, ஜிப்மர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.